## 8.1 தமிழ்நாடு ஊராட்சிகள் (ஒரு கிராமத்திலிருந்து யாதொரு உள்ளூர் பகுதியை நீக்குதல் அல்லது யாதொரு உள்ளூர் பகுதியை சேர்த்தல்) விதிகள், 1999

---

ஊரக வளர்ச்சி (சி4) துறை

அரசாணை (நிலை) எண். 147 நாள் : 21.07.1999

படிக்க :

ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.84647/1998/பிசிஎ.4, நாள் 05.10.98

**ஆணை**

இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையை 28.07.1999 நாளிட்ட சிறப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

**இணைப்பு**

**அறிவிக்கை**

தமிழ்நாடு 1994ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 242ம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் (1) பகுதியில் வழங்கியுள்ள அதிகாரங்களை கொண்டும், ஒரு கிராமத்தில் யாதொரு உள்ளூர் பகுதியை நீக்குவது அல்லது யாதொரு உள்ளூர் பகுதியை சேர்ப்பது தொடர்பான விதிகளை இரத்து செய்து அதற்கு பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் பின்வரும் விதிகளை இதனால் இயற்றுகிறார்.

**விதிகள்**

1. **குறுதலைப்பு: –** இவ்விதிகள் தமிழ்நாடு 1999ம் ஆண்டு ஊராட்சிகள் (ஒரு கிராமத்திலிருந்து யாதொரு உள்ளூர் பகுதியை நீக்குதல் அல்லது யாதொரு உள்ளூர் பகுதியை சேர்த்தல்) விதிகள் என பெயர் பெறும்.

2. **பொருள் விளக்கம் –** இவ்விதிகளில் சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி மற்றபடி **“சட்டம்”** என்பது தமிழ்நாடு 1994ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/1994) என்று பொருள்படும்.

3. **கிராம ஊராட்சியிலிருந்து யாதொரு உள்ளூர் பகுதியை நீக்குவதற்கு அல்லது யாதொரு உள்ளூர் பகுதியை சேர்ப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடுகள் –**

(1) ஒரு கிராமத்திலிருந்து ஒரு பகுதி நீக்கப்பட்டு, அப்பகுதி வேறொரு கிராமத்தில் சேர்ப்பது அவசியமென்றால் அன்றி அல்லது உகந்தது என்றால் அன்றி மற்றபடி அக்கிராமத்தில் அப்பகுதியைச் சேர்க்கக் கூடாது.

(2) ஒரு பகுதிக்கு தனி கிராம ஊராட்சி அல்லது கிராம ஊராட்சிகள் அமைப்பதால் அல்லது ஏற்கனவே கிராம ஊராட்சி உள்ள அல்லது கிராம ஊராட்சி அமைக்க கருதியுள்ள மற்றொரு கிராமத்தில் அப்பகுதியைச் சேர்ப்பதாக இருந்தாலன்றி மற்றபடி அக்கிராமத்திலிருந்து எந்த பகுதியையும் நீக்கக் கூடாது.

(3) ஒரு கிராமத்திலிருந்து ஒரு பகுதியை சேர்த்த பின்னர் அல்லது நீக்கிய பின்னர் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளின் வருவாய், கிராம நிர்வாகத்தை செம்மையான முறையில் நடத்துவதற்கு போதுமானது என்று ஆய்வாளர் கருதினாலன்றி மற்றபடி ஒரு கிராமத்திலிருந்து எந்த ஒரு பகுதியையும் நீக்கவோ, சேர்க்கவோ கூடாது.

(4) ஒரு கிராமத்திலிருந்து எந்த ஒரு பகுதியையும் நீக்கியதன் காரணமாக அக்கிராம ஊராட்சியின் வருவாய் கணிசமான அளவிற்கு குறைந்து விடும் என்று ஆய்வாளர் கருதினால் அக்கிராமத்திலிருந்து அப்பகுதியினை நீக்கக் கூடாது.

(5) ஒரு கிராமத்திலிருந்து ஒரு பகுதியை நீக்கி மற்றொரு கிராமத்தில் அப்பகுதியை சேர்ப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட இரு கிராம ஊராட்சிகளையும் கலந்தாலோசித்தாலன்றி மற்றபடி ஒரு கிராமத்திலிருந்து ஒரு பகுதியை நீக்கி அப்பகுதியை மற்றொரு கிராமத்துடன் சேர்க்கக் கூடாது.

(6) தனிக் காரணங்கள் இருந்தாலன்றி மற்றபடி, ஒரு கிராம ஊராட்சி ஒரே ஒரு வருவாய் கிராமத்தின் மீது மட்டுமே அதிகார வரம்பு உடையதாக இருந்தால், அவ்வருவாய் கிராமத்திலிருந்து எந்தப் பகுதியையும் நீக்கக் கூடாது.

(7) ஒரு கிராம ஊராட்சி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் கிராமங்களில் அதிகார வரம்பு கொண்டிருந்தால் ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கு அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் கிராமங்களுக்கு தனி கிராம ஊராட்சி அமைக்கப்படும் வகையில், அந்த கிராம ஊராட்சியின் அதிகார வரம்பிலிருந்து யாதொரு பகுதி நீக்கப்பட வேண்டும்.

(8) ஒரு கிராம ஊராட்சி ஒரு வருவாய் கிராமத்தின் மீதும், ஏனைய வருவாய் கிராமம் அல்லது கிராமங்களின் ஒரு பகுதி அல்லது பகுதிகள் மீதும் அதிகார வரம்பு கொண்டிருந்து, மேற்சொன்ன பகுதிகள் மேற்சொன்ன வருவாய் கிராமத்தையொட்டி அமைந்திராவிடின் அத்தகைய பகுதி அல்லது பகுதிகள் அந்த கிராம ஊராட்சியின் அதிகார வரம்பிலிருந்து நீக்கப்பட்டு, அடுத்தடுத்த பகுதிகளில் அதிகார வரம்பு கொண்டுள்ள கிராம ஊராட்சியின் அதிகார வரம்பிற்குள் சேர்க்கப்படலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்